**2022 மே 13 ஆந் திகதி வரையில் அரசாங்க வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் அந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை**

---

| தொடர் இலக்கம் | விபரம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1 | அறிக்கையின் பின்புலமும் தன்மையும் | 3 |
| 2. | கணக்காய்வின் நோக்கம் | 4 |
| 3. | அறிக்கை தயாரித்தல் முறைமை | 5 |
| 3.1 | ஆவணங்களின் பரீட்சிப்பு | 5 |
| 3.2 | ஏனைய பரீட்சிப்புக்கள் | 5 |
| 4. | கணக்காய்வின் விடயப்பரப்பு | 6 |
| 5. | விடயப்பரப்பின் எல்லை | 6 |
| 6. | மருத்துவ வழங்கல் தேவைகளை வழங்கும் செயல்முறைகளின் அறிமுகம் | 6 |
| 7. | பற்றாக்குறை மருத்துவ வழங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியின் காரணமாக இருப்பை வழங்க முடியாதிருந்தமை தொடர்பான தகவல்கள் | 11 |
| 8. | அவதானிப்புக்கள் | 18 |
| 9. | 2022 மே 13 ஆந் திகதிய வரையில் இனங்காணப்பட்டிருந்த பற்றாக்குறை மருந்து வழங்கலுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 25 |
| 10. | பரிந்துரை | 27 |
| | இணைப்புக்கள் | |

## 1. அறிக்கையின் பின்புலமும் தன்மையும்

-----------------------------------------------------------------

உயர்தரத்தையுடைய மருந்துகளை உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் மூலம் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கும் மருந்துகளை உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சின் தூரநோக்காக இருந்ததுடன் மருந்து உற்பத்தி மற்றும் வழங்கல் மேம்படுத்தல்களை செய்வதற்கு தேவையான கொள்கைகளை வழங்குதல் மற்றும் திட்டங்களை தயாரித்தல் போன்ற மருந்துகளின் தரத்தன்மையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சுகாதார துறைகளின் நிறுவனங்களுக்காக உரியவாறு மருந்துகளை வழங்குவதன் மூலம் உயர்ந்த சுகாதார மட்டத்தை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் இராஜாங்க அமைச்சின் பணியாகும்.

சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபையின் கீழுள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார துறைகளுக்குரிய ஏனைய நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற நோயாளர்களின் அவசர சேவைகளுக்காக தேவையான மருந்துகள், சத்திரசிகிச்சைப் பொருட்கள், கதிர்வீச்சு பொருட்கள் மற்றும் இரசாயன பொருட்கள் மருத்துவ வழங்கலாக இனங்காணப்படுகின்றது.

மருத்துவ வழங்கல் ஒட்டுமொத்தமான தேவையினையும் வழங்குவதற்கான பெறுகைகள், கட்டளைகள், கையேற்றல், வழங்குனர்களுக்கு கொடுப்பனவுகளை செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் அமுல்படுத்துதல், நிர்வகித்தல், செயற்படுத்துதல் மற்றும் மேற்பார்வை எனபவைகளுக்காக தாபிக்கப்பட்ட சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற மருத்துவ வழங்கல் பிரிவு 2020 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சிற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு முறையே ரூபா 85,950 மில்லியன் மற்றும் ரூபா 151,980 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் முறையே 99 சதவீதம் மற்றும் 50 சதவீதம் அதாவது முறையே ரூபா 85,205 மில்லியன் மற்றும் ரூபா 76,504 மில்லியன் மருத்துவ வழங்கலுக்கானதாகும். அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் மருத்துவ வழங்கலுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு 99 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, 2020 மற்றும் 2021 என்ற இரண்டு ஆண்டுகளின் போது மருத்துவ வழங்கலுக்கான உள்ளபடியான செலவினம் முறையே ரூபா 83,545 மில்லியன் மற்றும் ரூபா 73,638 மில்லியன் ஆகும்.

அதன் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மருத்துவ வழங்கலுக்காக காலாண்டில் உள்ளபடியான சராசரி வருமானம் ரூபா 20,886 மில்லியன் மற்றும் ரூபா 18,409 மில்லியனாக இருந்த போதும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் மருத்துவ வழங்கலுக்காக செலவிடப்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 12,454 மில்லியன் மாத்திரமாகும். மேலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மருத்துவ வழங்கலுக்காக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்துகள் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 25,561 மில்லியன் பொறுப்புக்களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. (விபரம் இணைப்பு 01 இல் காண்பிக்கப்படுகின்றது)

முக்கியமான விடயம் (Vital), அத்தியவசிய விடயம் (Essential) மற்றும் அத்தியவசியமல்லாத (Non Essential) ஆக வைத்தியசாலைகளில் பாவனைக்கு எடுக்கப்பட்ட மருந்துகளில் 1,146 எண்ணிக்கை, சத்திர சிகிச்சை பொருள் விடயங்களில் 8,648 எண்ணிக்கை, ஆய்வுகூடப் பொருட்களில் 3,900 எண்ணிக்கை மற்றும் கதிர்வீச்சு விடயங்களில் 44 எண்ணிக்கை ஆக காணப்பட்டது.அதனிடையே 2022 மே 13 ஆந் திகதி வரையில் முக்கியமான விடயம் (Vital) மற்றும் அத்தியவசிய விடயம் (Essential) மருந்துகளில் மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் வைத்தியசாலையில் இருப்பு பூச்சிய எண்ணிக்கை முறையே 190 மற்றும் 51 ஆகும். மேலும் அத்திகதி வரையில் முக்கியமான விடயம் (Vital) மற்றும் அத்தியவசிய விடயம் (Essential) சத்திர சிகிச்சை பொருட்களில் மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் வைத்தியசாலையில் இருப்பு பூச்சிய எண்ணிக்கை முறையே 2,724 மற்றும் 2,156 ஆகும். அவ்வாறே அத்திகயில் மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் வைத்தியசாலையில் இருப்பு பூச்சிய எண்ணிக்கை முறையே 850 மற்றும் 18 ஆகும். மேற்கூறப்பட்ட இருப்பு பூச்சிய மருத்துவ வழங்கல் தொடர்பாகவும், 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான இருப்பு காணப்படுகின்ற மருத்துவ வழங்கல் தொடர்பாகவும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் 14 பிரதான வைத்தியசாலைகளின் தகவல்கள் கோரப்பட்ட போதிலும் பற்றாக்குறை மருந்துகளின் பட்டியலை (விபரம் இணைப்பு 02 இல் காண்பிக்கப்படுகின்றது) அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி இந்த விசேட கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்படுகின்றது.

## 2. கணக்காய்வின் நோக்கம்

-------------------------------------------

2022 மே 13 ஆந் திகதி வரையில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய பற்றாக்குறை மற்றும் ஏனைய விடயங்களின் காரணமாக எழுந்திருந்த சிக்கலான காலப்பகுதியில் தரமான நோயாளர்களுக்கான சிகிச்சை மற்றும் நோய் நிவாரண சேவைகளை

வழங்குவதற்காக தேவையான மருத்துவ வழங்கல்கள் சரியான அளவில் உரிய நேரத்தில் வழங்கப்பட்டிருந்ததா எனவும் மற்றும் பற்றாக்குறை மருந்துகள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கண்டறிதலும் இந்த விசேட கணக்காய்வின் நோக்கமாகும். இந்த விசேட கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 3. அறிக்கை தயாரித்தல் முறைமை

---------------------------------------------------------

இந்த அறிக்கை தயாரிக்கும் போது கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் பின்பற்றப்பட்டிருந்தது.

### 3.1 ஆவணங்களின் பரீட்சிப்பு

-------------------------------------------

(அ) 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபைச் சட்டம்

(ஆ) மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவை

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(ஈ) 2008 ஆம் ஆண்டின் போது திருத்தத்திற்கு உட்பட்ட 1987 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட மருந்துகள் முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டல்களுடன் மருந்துகள் முகாமைத்துவ கைநூல் (Manual on Management of Drugs)

(உ) மருந்துகள் வழங்குவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள படிமுறைகளை அமுல்படுத்துவதற்காக 2013 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 02-133/2013 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை

(ஊ) மருத்துவ வழங்கல் தொடர்பான செயற்பாடுகளை நிர்வகிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட PRONTO கணனி முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்கள்

### 3.2 ஏனைய பரீட்சிப்புக்கள்

---------------------------------------

(அ) மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுக்குரிய அரசாங்க வைத்தியசாலை மூலம் பல்வேறு வகையில் பெறப்பட்ட தகவல்களை பகுப்பாய்விற்கு உட்படுத்துதல்.

(ஆ) மருந்து உற்பத்தி இராஜாங்க அமைச்சு, வைத்திய மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல்.

**4. கணக்காய்வின் விடயப் பரப்பு**

---

மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருத்துவ வழங்கல் தேவைகளை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட திட்டமுறைமை, மருத்துவ வழங்கலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளின் செயல்முன்னேற்றம், வைத்தியசாலையில் காணப்பட்ட மருந்து பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்வதற்கு வெளித்தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட உதவி மற்றும் அதற்காக அமைச்சின் பங்களிப்பு தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**5. விடயப் பரப்பின் எல்லை**

---

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் மூலம் முடிவுறும் போது எனது விடயப்பரப்பில் கீழே காண்பிக்கப்படுகின்ற எல்லைகளின் கீழ் இருப்பவை கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் பற்றாக்குறை மருந்து விடயங்களில் எண்ணிக்கை 616 (இணைப்பு 03) ஆக இருந்தமை இராஜாங்க அமைச்சினால் இனங்காணப்பட்டிருந்த போதும், அது தொடர்பான சகல தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படாத பற்றாக்குறை மருந்துகளின் பட்டியல் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மற்றும் 2022 மே 13 இல் இனங்காணப்பட்ட பூச்சிய இருப்பு மற்றும் 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான இருப்பு காணப்படுகின்ற மருத்துவ வழங்கல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு 2022 மே 24 ஆந் திகதி வரையும் காலம் எடுத்தமை.

**6. மருத்துவ வழங்கல் தேவைகளை வழங்கும் செயல்முறைகளின் அறிமுகம்**

---


6.1 மருத்துவ வழங்கலுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக 2012 திசெம்பர் 13 ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்த அமப/12/1602/509/005-11 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இருப்பு மீளாய்வுக் குழுவின் பரிந்துரையின்றி எந்தவொரு மருத்துவ வழங்கலும் கொள்வனவு செய்ய முடியாது.

6.2 அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்து வழங்கலுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட படிமுறைகளை அமுல்படுத்துவதற்காக 2013 செப்தெம்பர் 02

ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட அமைச்சு செயலாளரின் 02-133/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியில் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய மருந்து சரியான மருந்து முகாமைத்துவம் மற்றும் மருந்து பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் மருந்துகள் ஆய்வுக்குழு (Therapeutic Committee) மாதாந்தம் ஒழுங்குமுறையாக நடாத்துதல் வேண்டும்.

6.3 நிரந்தரமாக பயன்படுத்தப்படுகின்ற விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட விடயம் (Estimated items) ஆக இனங்காணப்பட்டு அவற்றின் வருடாந்த தேவை மதிப்பீடு செய்யப்பட்டு உலகளாவிய ரீதியில் பரந்துள்ள வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்காக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கட்டளைகளை அனுப்புதல், மதிப்பீடு செய்யப்படாத விடயங்கள் (Non-Estimated items) வருடாந்த தேவை மதிப்பீடு செய்யப்படாமல் தேவை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்தலும் இராஜாங்க அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட முறைமையாகும்.

6.4 மருத்துவ வழங்கல்களின் நுகர்வுப் போக்கு மற்றும் மிகுதி இருப்பின் அளவை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் வருடங்களின் தேவை அந்தந்த வைத்தியசாலைகளில் அதிகார தரப்பினரால் மதிப்பீடு செய்யப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்கு தேவையான மாதத்திற்கு 13 மாதங்களுக்கு முன்னர் அனுப்பப்படுகின்றது. அவ்வாறு அனுப்பப்பட்ட வருடாந்த தேவையின் ஒன்றுசேர்க்கப்பட்டு ஒட்டுமொத்தமான தேவையை இனங்காணுதல் மருத்துவ பிரிவின் பொறுப்பாகும். மருத்துவ வழங்கல்களின் தேவையை இனங்கண்டது முதல் மருத்துவ வழங்கல் நோயாளர்களுக்கு வழங்கும் வரையான நடைமுறைகள் கீழே உள்ள வரைபடத்தில் காண்பிக்கப்படுகின்றது.




6.5 மருத்துவ வழங்கல்கள் ஒட்டுமொத்தமாக தேசிய தேவையை வழங்கும் செயற்பாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை கொள்வனவு செய்வதற்காக மருந்துகள் முகாமைத்துவ கைநூலில் ஐந்தாவது அத்தியாயத்தில் 2 ஆவது பந்தியின் இணைப்பு III இன் பிரகாரம் 11 மாதங்கள் வழங்குதல் காலத்துடன் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளை விநியோகித்தல் கொள்கையாக இருந்தது.

6.6 நியாயமான விலையில் சுகாதார பாதுகாப்பு தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் சிறந்த மற்றும் உயர்தரத்தில் மருத்துவ வழங்கல்களை மாத்திரம் நாட்டிற்கு கொண்டுவரும் நோக்கில் வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ வழங்கல்களின் தரத்தை பரீட்சித்த பின்னர் அந்த வழங்குனர்களையும் அவர்களின் வழங்கல்களையும் பதிவு செய்வதற்கு 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் ஊடாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுச் சான்றிதழ் இன்றி எந்தவொரு மருத்துவ வழங்கலும் இலங்கை சுங்கத்தினால் விடுவிக்கப்படுவதில்லை.

6.7 மேற்கூறப்பட்ட 6.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்படாமல் இறக்குமதி செய்யப்படும் மருத்துவ வழங்கல்கள் உள்நாட்டு சந்தையில் வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதுடன் அவ்வாறான கொள்வனவுகள் இலங்கை சுங்கத்தினால் விடுவிப்புச் செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவு, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ வழங்கல் நிறுவனம் மேற்கொள்கின்ற தனியார் பிரிவின் நிறுவனங்களுக்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் எதிர்ப்பு தெரிவிக்காமை கடிதம் (Waiver of Registration Letters - WOR) விநியோகிக்கும் திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த எதிர்ப்பு தெரிவிக்காமை கடிதம் சமர்ப்பித்ததன் பின்னர் மாத்திரம் இலங்கை சுங்கத்தினால் மருத்துவ வழங்கல் விடுவிப்புச் செய்யப்படுகின்றது.

6.8 கொள்வனவு செய்யப்படுகின்ற மருத்துவ வழங்கல்களின் தரத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழ் தேசிய ஔடத தர பாதுகாப்பு பரிசோதனைக் கூடம் தாபிக்கப்பட்டுள்ளது. மருத்துவ வழங்கல்களின் தரத்தை பரீட்சிக்கும் ஆய்வுகூட பரிசோதனையின் அளவை அதிகரிக்கும் நோக்கில் தேசிய ஔடத தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தின் கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளங்களை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 410 மில்லியனுடன் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஐந்து வருட அபிவிருத்தி திட்டம் அமைச்சரவையினால் 2009 ஒக்தோபர் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

6.9 ஔடத முகாமைத்துவ கைநூல் (Manual on Management of Drugs) இன் பிரகாரம் மருந்துகளின் தன்மையை பாதுகாப்பதற்காக காற்றோட்டம் மற்றும் வெளிச்சம்கிடைக்கின்ற வகையில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் களஞ்சியம் குறித்துரைத்த வெப்பநிலையில் பேணிச் செல்லப்பட வேண்டும். அவ்வாறே செயற்திறனான இருப்புக் கட்டுப்பாட்டிற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 03 மாதங்களின் பாதுகாப்பு

இருப்பொன்று பேணிச் செல்லப்பட வேண்டியிருந்ததுடன் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் மருந்து களஞ்சியம் காலரீதியில் பரீட்சிப்பதற்கு மேலதிகமாக மருந்துகளை களஞ்சியப்படுத்துதல் மற்றும் கணக்கீடு செய்தலின் சரியான தன்மையை தெரிவுப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

6.10 சுகாதார அமைச்சினால் ஔடதங்களின் முகாமைத்துவம் தொடர்பான அவ்வவ்போது விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும்.

6.11 அமைச்சரவைப் பெறுகைகள் குழு, அமைச்சின் பெறுகைக் குழு, திணைக்கள பெறுகைக் குழு மற்றும் பிரதேச பெறுகைக்கு குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில், திறந்த போட்டி பெறுகைகள், வரையறுத்த போட்டி பெறுகைகள் மற்றும் விலை ஒப்பீட்டு முறைமைகள் போன்ற பல்வேறு பெறுகை முறைமைகளை பயன்படுத்தி உலகம் முழுவதிலும் வியாபித்துள்ள வழங்குனர்களிடமிருந்து உள்நாட்டு சந்தையிலிருந்தும் மருத்துவ வழங்கல் தேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

6.12 இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற கட்டளைகளுக்குரிய இருப்பினை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதங்கள் ஏற்படுகின்ற மருத்துவ வழங்கல்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவைப் போன்று அரசாங்கத்தின் வைத்தியசாலைகளினாலும் உள்நாட்டு சந்தையிலிருந்து (Local Purchase) இறக்குமதி செய்யப்பட்ட மருத்துவ வழங்கல்களில் கொள்வனவு மேற்கொள்ளப்படுகின்றது.

6.13 இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பந்தியில் குறிப்பிடப்பட்ட தாமதத்தின் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவு உள்நாட்டு சந்தையிலிருந்து மருத்துவ வழங்கல்களை கொள்வனவு செய்யும் போது செலவிடுவதற்கு ஏற்பட்டுள்ள மேலதிகக் கிரயம் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்படல் வேண்டும்.

6.14 மருத்துவ வழங்கல் முகாமைத்துவ செயற்பாடுகளை மிகவும் சிறந்ததாக ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும், அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் அத்தியவசிய மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கும் தேவையான மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MSMIS) இனை பேணிச் செல்வதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 191.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த தகவல் முறைமை அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் 55 நிறுவனங்களுக்கும், 26 பிரதேச மருந்து களஞ்சியத்திற்கும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கும், தேசிய ஔடதங்கள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் மற்றும் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கும் தொடர்புபடுத்தப்படுகின்றது. மருத்துவ வழங்கல்களை கட்டளையிட்டது முதல்

விநியோகிக்கும் வரையிலான ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக மேற்கொள்ளுதல் முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

## 7. பற்றாக்குறை மருத்துவ வழங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியின் காரணமாக இருப்பை வழங்க முடியாதிருந்தமை தொடர்பான தகவல்கள்

7.1 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும், 2022 மே 13 ஆந் திகதி வரையிலும் இருப்பு பூச்சியம் மற்றும் 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான இருப்பு காணப்படுகின்ற மருத்துவ வழங்கல் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

7..1.1 2022 மே 13 ஆந் திகதி வரையில் இனங்காணப்பட்ட இருப்பு பூச்சியம் முக்கியமான விடயம் (Vital) மற்றும் அத்தியவசிய விடயம் (Essential) மருத்துவ வழங்கல் விடயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மருத்துவ வழங்கல் விடயங்களின் வகை | இருப்பு பூச்சியமாக இருந்த விடயங்களின் எண்ணிக்கை (out of stock) | | |
|---|---|---|---|
| | மருத்துவ வழங்கல் பிரிவில் | | வைத்தியசாலையில் |
| முக்கியமான மற்றும் அத்தியவசிய (Vital/ Essential) மருந்துகள் | 190 | | 51 |
| முக்கியமான மற்றும் அத்தியவசிய (Vital/ Essential) சத்திர சிகிச்சை பொருட்கள் | 2,724 | | 2,156 |
| தினந்தோறும் பயன்படுத்தப்படுகின்ற ஆய்வுகூடப் பொருட்கள் (Regular and Complementary items) | | 850 | |
| எக்ஸ் ரே | | 18 | |
| மொத்தம் | 2,914 | 868 | 2,207 |

7.1.2 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும், 2022 மே 13 ஆந் திகதி வரையிலும் இருப்பு பூச்சியமான மருந்து விடயங்களின் எண்ணிக்கை முறையே 306 மற்றும் 311 ஆகும். விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மருந்து விடயங்களின் வகை | | வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருந்து விடயங்களின் எண்ணிக்கை | 2022 ஏப்ரல் 22 ஆந் திகதியில் இருப்பு பூச்சியமான மருந்து விடயங்களின் எண்ணிக்கை(out of stock ) | 2022 மே 13 ஆந் திகதி ஆந் திகதியில் இருப்பு பூச்சியமான மருந்து விடயங்களின் எண்ணிக்கை(out of stock ) |
|---|---|---|---|---|
| (i) | முக்கியமான விடயம் **(Vital)** | 14 | 03 | 02 |
| (ii) | அத்தியவசிய விடயம்**(essential)** | 646 | 176 | 188 |
| (iii) | அத்தியவசியமற்ற விடயம்(Non essential) | 486 | 127 | 121 |
| | மொத்தம் | 1,146 | 306 | 311 |

7.1.3 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து இருப்பு விடயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மருந்து விடயங்களின் வகை | 01 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | 01 மாதத்திற்கும் 02 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | 02 மாதங்களுக்கும் 03 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| முக்கியமான (Vital) 14 விடயங்களில் | 05 | 02 | 01 | **08** |
| அத்தியவசிய (Essential) 646 விடயங்களில் | 116 | 57 | 46 | **219** |
| அத்தியவசியமற்ற (Non Essential) 486 விடயங்களில் | 47 | 19 | 17 | **83** |
| மொத்தம் | **168** | **78** | **64** | **310** |

7.1.4 2022 மே 13 ஆந் திகதி வரையில் 03 மாதங்களை விட குறைந்த காலத்திற்காக மாத்திரம் இருப்பு அளவில் உள்ள மருந்து விடயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| மருந்து விடயங்களின் வகை | 01 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | 01 மாதத்திற்கும் 02 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | 02 மாதங்களுக்கும் 03 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான மருந்து விடயங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| முக்கியமான (Vital) 14 விடயங்களில் | 06 | 01 | 01 | **08** |
| அத்தியவசிய (Essential) 646 விடயங்களில் | 104 | 52 | 51 | **207** |
| அத்தியவசியமற்ற (Non Essential) 486 விடயங்களில் | 45 | 27 | 15 | **87** |
| மொத்தம் | 155 | 80 | 67 | 302 |

7.2 மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் சுகாதார நிறுவனங்களின் இருப்பு பூச்சியமாக காணப்பட்ட (Out of stock) முக்கியமான (Vital) மற்றும் அத்தியவசிய (Essential) மருந்துகள் கீழே விபரங்கள் குறிப்பிடப்பட்ட நோய்த் தொகுதிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| **நோய் தொகுதி** | **மருத்துவ வழங்கல் பிரிவில் இருப்பு பூச்சியமாக உள்ள விடயங்களின் எண்ணிக்கை** | **நிறுவனத்தின் இருப்பு பூச்சியமான உள்ள விடயங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) அபாயகரமான மருந்துகள் (Narcotics) 13விடயங்களில் | 05 | 01 |
| (ii) பரவும் நோய்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற மருந்துகள் (Drugs used in the treatment of infections) 67விடயங்களில் | 16 | 04 |
| (iii) இருதய முறைமை சம்பந்தமான நோய்கள் (Drugs used in the treatment of Cardiovascular system) 63 விடயங்களில் | 12 | 02 |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மத்திய நரம்பு மண்டலம் சார்ந்த நோய்களுக்கான சிகிச்சை (Drugs acing on the treatment of Central Nervous system) 68 விடயங்களில் | 15 | 04 |
| (v) | ஊட்டச்சத்து மற்றும் குருதி தாக்கங்கள் தொடர்பான மருந்துகள் (Drugs affecting nutrition & blood) 54 விடயங்களில் | 24 | 06 |
| (vi) | சுவாச முறைமை நோய்கள் (Drugs used in the treatment of disease of the Respiratiry system) 34 விடயங்களில் | 02 | - |
| (vii) | நோய்த்தடுப்பு உற்பத்தி மற்றும் தடுப்பூசிகள் (Immunological products & vaccines)14 விடயங்களில் | 06 | 02 |
| (viii) | குழாய் முறைமை சிகிச்சைகள் ප්‍රතිකාර (Drugs used in the treatment of Endocrine system)37 விடயங்களில் | 09 | - |
| (ix) | இரைப்பை குழாய் முறைமை சிகிச்சை ප්‍රතිකාර (Drugs acing on the treatment of Gastrointestinal system)14 விடயங்களில் | 03 | 01 |
| (x) | கண், காது,மூக்கு சார்ந்த (Drugs acing on the eye, ear, nose & oropharynx & skin)74 விடயங்களில் | 33 | 06 |
| (xi) | கொடிய நோய்கள் (Drugs used in the treatment of malignant diseases & for immunosupression)85 விடயங்களில் | 31 | 10 |
| (xii) | மகப்பேற்று, பெண்ணோயியல் மற்றும் சிறுநீர் கோளாறுகள் (Drugs used in obstetrics,gynaecology & urinary tract diseases)13 விடயங்களில் | 06 | 02 |
| (xiii) | தசை மற்றும் மூட்டுவலி சிகிச்சை (Drugs used in the treatment of musculoskeletal & joint diseases) 13 விடயங்களில் | 03 | - |
| (xiv) | மயக்க மருந்து(Drugs used in anaesthsia)30 விடயங்களில் | 07 | - |
| (xv) | மனஅழுத்த எதிப்பு மருந்து (Antidotes)09 விடயங்களில் | 07 | 05 |
| | | ---- | --- |
| | | 179 | 43 |
| | | === | == |

7.3 2022 மே 13 ஆந் திகதி வரையில் இருப்பு பூச்சியமான சத்திர சிகிச்சை விடயங்கள் மற்றும் 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான இருப்பு காணப்படுகின்ற சத்திர சிகிச்சை விடயங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

7.3.1 2022 மே 13 ஆந் திகதி வரையில் இனங்காணப்பட்ட இருப்பு பூச்சியமான சத்திர சிகிச்சை விடயங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சத்திர சிகிச்சை | | 2022 மே 13 ஆந் திகதியில் பற்றாக்குறை சத்திர சிகிச்சை விடயங்களின் எண்ணிக்கை (out of stock ) | |
|---|---|---|---|
| | | மருத்துவ வழங்கல் பிரிவில் | வைத்தியசாலையில் |
| (i) | முக்கியமான விடயம் **(Vital)** | 03 | 03 |
| (ii) | அத்தியவசிய விடயம்**(essential)** | 2,721 | 2,153 |
| (iii) | அத்தியவசியமற்ற விடயம்(Non essential) | 2,330 | 1,459 |
| மொத்தம் | | 5,054 | 3,615 |

7.3.2 2022 மே 13 ஆந் திகதி வரையில் 03 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான இருப்பு காணப்படுகின்ற சத்திர சிகிச்சை விடயங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சத்திர சிகிச்சை விடயங்களின் வகை | 01 மாத காலத்தை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் போதியளவான சத்திர சிகிச்சை விடயங்களின் எண்ணிக்கை | 01 மாதத்திற்கும் 02 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான சத்திர சிகிச்சை விடயங்களின் எண்ணிக்கை | 02 மாதங்களுக்கும் 03 மாதங்களுக்கும் இடையிலான காலத்திற்காக மாத்திரம் போதியளவான சத்திர சிகிச்சை விடயங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| முக்கியமான விடயம் **(Vital)** | - | - | - | **-** |
| அத்தியவசிய விடயம்**(essential)** | 540 | 18 | 22 | **580** |
| அத்தியவசியமற்ற விடயம்(Non essential) | 562 | 35 | 31 | **628** |
| மொத்தம் | **1,102** | **53** | **53** | **1,208** |

7.4 2022 மே 13 ஆந் திகதி வரையில் இருப்பு பூச்சியமான ஆய்வுகூட விடயங்கள் மற்றும் 03 மாதங்களை விட குறைந்த காலத்திற்காக மாத்திரம் இருப்பு காணப்படுகின்ற ஆய்வுகூட விடயங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆய்வுகூட விடயங்களின் வகை | வவத்தியசாலையில் பயன்படுத்துகின்ற விடயங்களின் எண்ணிக்கை | 2022 மே 13 ஆந் திகதியில் பற்றாக்குறை விடயங்களின் எண்ணிக்கை (out of stock ) | 2022 மே 13 ஆந் திகதியில் 03 மாதங்களை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் இருப்பு காணப்படுகின்ற விடயங்களின் எண்ணிக்கை (out of stock ) |
|---|---|---|---|
| **Regular items** | 800 | 250 | 85 |
| **Complementary items** | 3,100 | 600 | 300 |
| | 3,900 | 850 | 385 |

7.5 2022 மே 13 ஆந் திகதி வரையில் இருப்பு பூச்சியமான எக்ஸ்ரே விடயங்கள் மற்றும் 03 மாதங்களை விட குறைந்த காலத்திற்காக மாத்திரம் இருப்பு காணப்படுகின்ற எக்ஸ்ரே விடயங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| எக்ஸ்ரே விடயங்களின் வகை | வவத்தியசாலையில் பயன்படுத்துகின்ற விடயங்களின் எண்ணிக்கை | 2022 மே 13 ஆந் திகதியில் பற்றாக்குறை விடயங்களின் எண்ணிக்கை (out of stock ) | 2022 மே 13 ஆந் திகதியில் 03 மாதங்களை விட குறைவான காலத்திற்காக மாத்திரம் இருப்பு காணப்படுகின்ற விடயங்களின் எண்ணிக்கை (out of stock ) |
|---|---|---|---|
| **Regular items** | 44 | 18 | 06 |

7.6 2020, 2021 முற்றும் 2022 இன் ஆரம்ப காலாண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாார, அரசியல் நெருக்கடிகளினால் ஏற்பட்டிருந்த அந்நிய செலவாணி பற்றாக்குறையின் காணமாக கட்டளையிடப்பட்ட மருத்துவ வழங்கல் சரியாக கிடைத்திருக்கவில்லை. இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்நிய செலவாணி பற்றாக்குறையின் காணமாக 2022 ஏப்ரல் 22 இல் நாணயக்கடிதம் திறக்க முடியாத சந்தர்ப்பங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நாணயக் கடித விண்ணப்பம் காணப்படுகின்ற மட்டம் | மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவையான மருத்துவ வழங்கலுக்கான பெறுமதி | SPCமருத்துவ வழங்கலுக்கான பெறுமதி |
|---|---|---|
| ------------------------------------------ | --------------------------- | ------------------------ |
| | ஐ.அ.டொலர். மில்லியன் | ஐ.அ.டொலர். மில்லியன் |
| வங்கியில் காத்திருக்கும் மட்டத்தில் காணப்படுகின்ற நாணயக் கடிதத்திற்காக | 3.0 | 3.0 |
| வங்கிக்கு சமாப்பிப்பதற்கு உள்ள நாணயக் கடிதத்திற்காக | 7.0 | 0.2 |
| | --- | ---- |
| | 10 | 3.2 |

7.7 அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்நிய செலவாணி பற்றாக்குறையின் காணமாக 2022 ஏப்ரல் 22 இல் 24 விடயங்களுக்குரிய இன்டென்ட் 33 இற்காக ஐ.அ.டொலர் 4,005,381 தொகையும், யூரோ 344,552 தொகையும், டென்மார்க் குரோன் 2,570,625 தொகையும் ஆன வெளிநாட்டு நாணயக்கடிதங்கள் திறக்க முடியாதிருந்தது. (விபரம் இணைப்பு 04 இல் காண்பிக்கப்படுகின்றது)

7.8 அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டு சந்தையில் கட்டளையிடப்பட்ட மருத்துவ வழங்கலுக்காக வழங்குனர்கள், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு 2022 ஏப்ரல் 20 அந் திகதி வரையில் செலுத்துவதற்குள்ள மொத்த பணம் ரூபா 4,278.83 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பணம் செலுத்தவேண்டிய தரப்பினர் | தொகை |
|---|---|
| ---------------------------------------- | ----------- |
| | ரூபா |
| வழங்குனர்களுக்கு | 3,113,733,700 |
| மக்கள் வங்கிக்கு | 917,949,778 |
| இலங்கை வங்கிக்கு | 247,141,647 |
| மொத்தம் | 4,278,825,125 |

7.9 2022 மே 25 அந் திகதி வரையில் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டு வழங்கல் பிரிவின் கட்டளைக்காக நாணயக் கடிதம் விநியோகிப்பதற்கு, வழங்குனர்களுக்கு செலத்துவதற்கு மற்றும் இறக்குமதி மற்றும் விடுவித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 7,135 மில்லியன் தொகையும்,மருத்துவ வழங்கலுக்காக பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வதிகளை தீர்ப்பதற்காக ரூபா 15,988 மில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 23,123 மில்லியன் நிதித் தேவையொன்று காணப்படுவதாக அந்தக் கூட்டுத்தாபனத்தால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 8. அவதானிப்புக்கள்

------------------------

8.1 மேலே இலக்கம் 7 இல் குறிப்பிடப்பட்ட மருந்து வழங்கல் பற்றாக்குறையை ஏற்படுத்துவதற்கு அண்மித்த காரணம் அந்நிய செலாவணி பற்றாக்குறையாக இருந்த போதிலும், மருத்துவ வழங்கல் பிரிவிற்காக ஸ்தாபிக்கப்பட்ட கணனி முறைமை சரியாக நாளதுவரையாக்கப்படாமை மற்றும் அவை உரிய சரியான பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை, மருத்துவ வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பொன்று மற்றும் இணைப்பொன்று காணப்படாமை, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்படுகின்ற கட்டளைகளின் அமுல்படுத்தும் நிலைமை மற்றும் செயல்முன்னேற்றம் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யும் நடைமுறையொன்று காணப்படாமை மற்றும் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற விடயங்கள் அந்த மருந்துகளின் பற்றாக்குறை ஏற்படுவதற்கு பிரதானமாக இருந்தமையும் அந்த மருந்துகள் பற்றாக்குறைக்கான காரணமாக இருந்தமையும், 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் இராஜாங்க அமைச்சினால் முக்கியமான (Vital) மற்றும் அத்தியவசிய (Essential) பற்றாக்குறை மருந்தாக இனங்காணப்பட்டிருந்த மருந்து விடயங்கள் 406 இல் 81 மருந்து விடயங்களுக்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்ட கட்டளைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

8.1.1 மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்காக மருத்துவ வழங்கல் முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (Medical Supply Management Information System - MSMIS) ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த முறைமை மூலம் 2015 ஆம் ஆண்டு முதல் மருத்துவ வழங்கல் பிரிவு, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம், இலங்கை அரச மருந்தக உற்பத்தி கூட்டுத்தாபனம், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வைத்தியசாலைகளை உள்ளடக்கிய 82 நிறுவனங்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் போது அந்த முறைமை தள வைத்தியசாலைகள் வரை பரவலடைந்து மருத்துவ வழங்கல் கட்டளையிடல், பகிர்ந்தளித்தல் மற்றும் இருப்பு முகாமைத்துவத்திற்காக இந்த முறைமை பயன்படுத்தப்படுகின்றது. 2015 நவம்பர் 27 ஆந் திகதி சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் முறைமை தாபிக்கப்பட்டுள்ள சகல வைத்தியசாலைகளினதும் இருப்புக்களின் பெறுவனவுகளை உறுதிப்படுத்துதல் மற்றும் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் இந்த முறைமை மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக இந்த கணனி முறைமையை பயன்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும், இந்த

கணனி முறைமை சரியான பிரகாரம் நாளதுவரையாக்குதல் மற்றும் உரிய பிரகாரம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்தந்த வருடங்களுக்குரிய கட்டளை பட்டியல் 11 மாத வழங்கல் காலத்துடன் (Lead Time) இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு இந்த MSMIS அதாவது PRONTO கணனி முறைமை ஊடாக சமர்ப்பிக்கப்படுகின்ற போதும், கூட்டுத்தாபனத்தால் அந்த கட்டளைகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் கட்டளை பட்டியல்களில் எழுத்துமூல பிரதி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் வரை பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தாமதிக்கப்பட்டிருந்தது. கணனி முறைமை ஊடாக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்படுகின்ற கட்டளைகளின் எழுத்துமூல பிரதி கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி பிரிவிற்கு அனுப்புவதற்கு 18 நாட்களுக்கு மேற்பட்ட காலம் எடுப்பதுடன் அதன் பின்னர் மாத்திரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்றமையால் 11 மாதங்களான வழங்கல் கால எல்லையில் கவனத்தில் கொள்ளக்கூடிய காலமொன்றில் கட்டளை விநியோகித்தல் மற்றும் கட்டளைகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவின் மருந்தியலாளர்கள் மற்றும் உயர் உத்தியோகத்தர்கள் கட்டளைகளை கணனி முறைமை மூலம் விநியோகிக்கின்ற போது எழுத்து மூல ஆவணங்கள் தாமதமாக அனுப்பப்பட்டிருந்தது. முக்கியமான மருந்தாக கருதப்படுகின்ற (Vital items) மருந்து விடயங்கள் 08 மற்றும் அத்தியவசிய (essential) மருந்துகளுக்குரிய 90 கட்டளைகளில் 41 இற்குரிய கட்டளை பட்டியல், ஆண்டின் ஆரம்ப இரண்டு மாதங்களின் போது கணனி முறைமை மூலம் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதும் அந்த கட்டளை பட்டியல்களின் எழுத்து மூல பிரதி அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி பிரிவிற்கு கிடைப்பதற்கு 18 நாட்களுக்கும் 06 மாதங்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. ஒரு கட்டளைப் பட்டியலில் பல கட்டளைகள் அனுப்பப்படுவதால் பட்டியலின் தாமதம் அந்த பட்டியலிலுள்ள மருந்து விடயங்கள் யாவற்றுக்கும் தாக்கம் ஏற்படுத்தியிருந்மையும் அவதானிக்கப்பட்டது. (விபரம் இணைப்பு 05 இல் காண்பிக்கப்படுகின்றது)

(ii) மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்கு பிரதானமாக தொடர்புபடுகின்ற மருத்துவ வழங்கல் பிரிவு, சுகாதார அமைச்சு, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் போன்ற அரசாங்க நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பு மற்றும் இணைப்பொன்று

காணப்படாதிருந்தமை பல வருடம் காலம் முதல் அவதானிக்கப்படுவதுடன் அந்த நிறுவனங்களினால் கட்டளைகளுக்குரிய நடவடிக்கைகள் நிறுவனத்தால் கட்டளைக்குரிய நடவடிக்கைகள் தனியாக மேற்கொள்ளப்படுகின்மை அவதானிக்கப்பட்டது.ஸ்ரீஸ்ரீ சரியான முறையில் மேற்கொள்ளாமை அவதானிக்கப்பட்டது. மருந்துகளை கட்டளையிடுவது முதல் இருப்பு கிடைக்கின்ற சந்தர்ப்பம் வரை ஒவ்வொரு கட்ட முறைமைகளும் உள்ளடக்கி (Status) உரிய கட்டளைகள் தொடர்பான செயல்முன்னேற்றத்தை நாளதுவரையாக்கும் வசதிகள் கணனிமுறைமை மூலம் மேலே குறிப்பிடப்பட்ட சகல நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த போதும் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் கட்டளைகளுக்குரிய தகவல்கள் 07 வருட காலமாக காணப்பட்ட தொழில்நுட்ப பிரச்சினையால் முறைமையில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அக்கூட்டுத்தாபனத்தினால் கட்டளையிடுவதற்குரிய தகவல்கள் இந்த முறைமை ஊடாக நாளதுவரையாக்காமல் அவர்களினால் தனிப்பட்ட கணனி முறைமையில் (Excel) ஊடாக தகவல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் உரிய கேள்வியின் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட திகதி, பெறுகை குழுவின் தீர்மானம் வழங்கிய திகதி, நாணயக் கடிதம் திறக்கப்பட்ட திகதி போன்ற தகவல்களை விரைவாக பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக பெறுகைகள் தாமதத்திற்கு யார் பொறுப்பாக இருந்தார்கள் என்பதை பரீட்சிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் கட்டளையின் தற்போதைய செயல் முன்னேற்றம் தொடர்பாக விரைவான தகவல்களை அறிந்து கொள்வதற்கும் அதிக காலம் எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) மருத்துவ வழங்கல் பிரிவினால் கணனி முறைமை ஊடாக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்ட சில கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதும், கட்டளைகளை இரத்துச் செய்வதற்காக கணனி முறைமையில் காணப்படுகின்ற (Change Request) வசதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கணனி முறைமை மூலம் வைத்தியசாலைகளில் வாட்டுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்பு நிலைமையினை வெளிப்படுத்தாமையினால் வைத்தியசாலைகளுக்கு இந்த சந்தர்ப்பத்தில் அத்தியவசிய மருத்துவ வழங்கல்கள் என்ன என்பது தொடர்பான பகுப்பாய்வினை செய்வதற்காக தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

8.1.2 மருத்துவ வழங்கல் பிரிவினால் அடுத்துவரும் ஆண்டிற்காக கட்டளையிடப்பட்ட 13,000 அளவிலான மருத்துவ வழங்கல் விடயங்களின் செயல்முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்கு பல வருட காலம் முதல் பேரியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

8.1.3 மருத்துவ வழங்கல் பிரிவினால் 11 மாத காலம் வழங்கல் காலத்துடன் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக கட்டளைகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் 27 கட்டளைகளுக்குரிய பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர்.(விபரம் இணைப்பு 06 மற்றும் 07 இல் காண்பிக்கப்படுகின்றது)

8.1.4 முக்கியமான (Vital) மருந்து விடயங்கள் 11 இற்குரிய 2021 ஆம் ஆண்டிற்காக 2020 ஆம் ஆண்டின் போதும், 2022 ஆம் ஆண்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போதும் 19 கட்டளைகள் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 04 கட்டளைகளுக்குரிய சிறிய இருப்பு அளவொன்று மாத்திரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு கிடைத்திருந்தது. ஏனைய சகல கட்டளைகளும் பெறுகைகள் பிரச்சினை மற்றும் பெறுகை தாமதத்தின் காரணமாக இருப்பு கிடைத்திருக்கவில்லை. (விபரம் இணைப்பு 07 இல் காண்பிக்கப்படுகின்றது)

8.1.5 மதிப்பீடு செய்யப்பட்ட விடயங்களை கொள்வனவு செய்வதற்காக 11 மாதம் வழங்கல் காலமொன்றுடன் கட்டளைகளை விநியோகித்தல் கொள்கை ரீதியாக இருக்கும் போது பெறுகைகள் கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 11 மாத காலத்திற்கு மேற்பட்டு அல்லது 11 மாதத்தை விட மேற்பட்ட காலமொன்று பெறுகை நடவடிக்கைகளுக்காக எடுத்திருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மருத்துவ வழங்கல் பிரிவினால் விநியோகிக்கப்பட்ட சில கட்டளைகளின் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக 12 மாதங்களுக்கும் 27 மாதங்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. (விபரம் இணைப்பு 06 மற்றும் 07 இல் காண்பிக்கப்படுகின்றது)

8.1.6 வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற முக்கியமான (Vital) தொகுதியில் வருகின்ற 11 மருந்து விடயங்களுக்கிடையே 02 மருத்துவ வழங்கல் விடயங்கள் மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் வைத்தியசாலையின் இருப்புக்கள் முழுமையாக பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்காக பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தது.

(i) முக்கியமான (Vital) மருந்தான நீர்எதிர்ப்பு நோய்க்கு நிவாரணமளிக்கும் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற Anti Rabies Serum விடயத்தின் இருப்புக்கள்

மருத்துவ வழங்கல் பிரிவில் பூச்சியமாக இருந்தமையும் வைத்தியசாலையில் மாதமொன்றிற்கு குறைவான காலத்திற்காக இருப்புக்களை பேணுவதற்கும் காரணம் அந்நிய செலவாணி பற்றாக்குறை அல்லாமல் பெறுகை செயற்பாடுகள் பிரச்சினைகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்காக கட்டளை சமர்ப்பித்து 07 மாதங்களுக்கு பின்னர் மருத்துவ வழங்கல் பிரிவினால் கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்காக 2018 மார்ச் 28 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட கட்டளைகள் 21 மாதங்களுக்கு பின்னர் 2022 சனவரி 06 ஆந் திகதி மீண்டும் திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டளைகள் வழங்குனருக்கு 2022 சனவரி 19 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 07 ஆந் திகதி நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கட்டளைகள் சரியான பிரகாரம் திட்டமிடப்படாமை இந்த மருந்து விடயங்களின் பற்றாக்குறைக்கு அடிப்படை காரணமாக இருந்தது.

(ii) அவ்வாறே நீர்எதிர்ப்பு நோய் சிகிச்சைக்கு தேவையான மருந்துகள் 2022 ஆம் ஆண்டிற்குரிய Anti Rabies (TC) தடுப்பூசிகளை கொள்வனவு செய்யும் கட்டளை இலங்கை மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2021 மார்ச் 17 ஆந் திகதி கிடைத்திருந்த போதும், அது 12 மாதங்களுக்கு பின்னர் 2022 மார்ச் 24 ஆந் திகதி உரிய கட்டளை நிராகரிக்கப்பட்டு (Purchase Order) வழங்குனருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவு இந்த விடயத்தின் இருப்பு மட்டம் ஒரு மாதத்தினை விட குறைந்த காலத்திற்காக போதுமானதாக இருந்த போதிலும் வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற இருப்பு மட்டத்தை முகாமைத்துவம் செய்யக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை இருப்பு பூச்சியமான முக்கியமான (Vital) மருந்தான இருதய நோய்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற Streptokianseஊசி மருந்து 2022 ஆம் ஆண்டிற்கான கட்டளை 2021 சனவரி மாதத்தின் போது இலங்கை மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதும் வழங்குனர்கள் இன்மையினால் இரண்டு தடவைகள் கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கோரப்பட்டிருந்தது. 2022 மார்ச் மாதம் வரையில் கேள்வி மதிப்பீட்டு மட்டத்தில் காணப்பட்டமையால் இருப்பு பற்றாக்குறை எழுந்திருந்தது. எனினும், ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதியுதவியின் கீழ் அதில் 250 தடுப்பூசிகள் ரூபா 559,782 தொகையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் அந்த இருப்புக்கள் கிடைத்த பின்னர் எதிர்வரும் 03 மாதங்களை விட அதிக காலத்திற்கு இருப்பு போதியளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) Stretokianse தடுப்பூசிகள் பயன்படுத்தும் போது ஏற்பட்டிருந்த உப விளைவுகளின் காரணமாக அந்த தடுப்பூசிக்கு பதிலாக Tenecteplase 40mg தடுப்பூசியை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. Tenecteplase 40mg தடுப்பூசிக்காக முன்னைய ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட கட்டளைக்காக பெற்றுக்கொள்வதற்கு குறித்துரைத்த இருப்பு போதியளவாக இருந்தமையால் 2022 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கட்டளைகளை இரத்துச் செய்வதற்கு 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவு தீர்மானித்திருந்தது. எனினும், 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவில் 02 மாதங்களை விட குறைந்த காலத்திற்காக இருப்பு காணப்படுகின்றமையால் அமைச்சினால் பற்றாக்குறை மருந்தொன்றாக இனங்காணப்பட்டிருந்தது.

8.1.7 மயக்க நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற Suxamethonium chloride 70,000 தடுப்பூசிகள் 2021 ஆம் ஆண்டிற்காக கட்டளை 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்டு 24 மாதங்களுக்கு பின்னர் 2022 மார்ச் 11 ஆந் திகதி நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தமையால் அந்த இருப்பு 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே 2022 ஆம் ஆண்டிற்கான 90,000 தடுப்பூசிகளின் கட்டளை 2021 சனவரி 31 ஆந் திகதி அந்த கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்பட்ட போதும் 2022 மார்ச் 08 ஆந் திகதி இருப்பு கிடைக்க வேண்டிய திகதி 2023 ஆம் ஆண்டு வரை மருத்துவ வழங்கல் பிரிவினால் திருத்தப்பட்டிருந்தது. அதனால் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையில் மருத்துவ வழங்கல் பிரிவில் இந்த விடயங்கள் 02 வாரங்களுக்கு குறைந்ா காலத்திற்காக மாத்திரம் இருப்பு காணப்பட்டதுடன் வைத்தியசாலைகளில் 02 மாதங்களை விட குறைந்த காலத்திற்காக இருப்பு காணப்பட்டது.

8.1.8 அத்தியசிய மருந்தான ஒவ்வாமைக்கு பயன்படுத்துகின்ற Cetirizine HCL திரவ மருந்தில் 220,000 போத்தல்கள் 2019 ஆம் ஆண்டிற்கான கட்டளை மருத்துவ வழங்கல் பிரிவினால் 2018 பெப்ரவரி 07 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட போதும் அத்திகதி முதல் 27 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு பின்னர் 2020 மே 31 ஆந் திகதி நாணயக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தின் போது மருத்துவ வழங்கல் பிரிவு 2020 ஆம் ஆண்டிற்காக 2019 நவம்பர் 15 ஆந் திகதி விநியோகித்த 340,000 போத்தல்களுக்கான கட்டளை உள்நாட்டு உற்பத்தியாளர் ஒருவரினால் வழங்கப்பட்டிருந்தமையினால் 2019 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட கட்டளை 2020 யூலை 29 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2021 ஆம் ஆண்டிற்காக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 260,000 போத்தல்களின் கட்டளையொன்று 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட போதும், அந்த கட்டளைகளுக்காக 21 சதவீதம் அதாவது 55,872 போத்தல்கள்

கிடைத்ததன் பின்னர் 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்தக் கட்டளை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 மே 12 ஆந் திகதி வரையிலும் 2022 ஆம் ஆண்டிற்காக எந்தவொரு கட்டளையும் மருத்துவ வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதிகமாக சிறு பிள்ளைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற இந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவினால் மாதாந்த தேவையாக 21,664 போத்தல்களாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவில் இருப்பு பூச்சியமாக காணப்பட்டதுடன் வைத்தியசாலைகளில் 05 வாரங்களுக்கு போதியளவான இருப்பு மாத்திரம் காணப்பட்டது. 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, குருணாகல் போதனா வைத்தியசாலை மற்றும் பதுளை பொது வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளில் இருப்பு மட்டம் பூச்சியமாகக் காணப்பட்டது.

8.1.9 அத்தியவசிய உயிர்காக்கும் மருந்தான Meropenem1g தடுப்பூசி 2021 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்வதற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு 2020 சனவரி 05 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த கட்டளையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சரியான தீர்மானம் எடுக்காமை மற்றும் சரியான பிரகாரம் திட்டமிடாமை காரணமாக அமைச்சரவையின் நிலையான பெறுகைக் குழு மட்டம் முதல் அமைச்சின் பெறுகைக்குழு மட்டம் வரை காணப்பட்டமை, கட்டளையின் அளவு அவ்வவ்போது மாற்றப்பட்டமை, அமைச்சின் விடயப் பொறுப்புக்கள் மாற்றமடைந்தமையின் காரணமாக சுகாதார அமைச்சின் பெறுகைக்குழுவினால் இராஜாங்க அமைச்சின் பெறுகைகள் குழுவிற்கு மாற்றப்பட்டமை, மீண்டும் ஒப்பந்தப் பெறுமதி உயர்வடைந்தமையின் அடிப்படையில் இராஜாங்க அமைச்சின் பெறுகைக்குழு மட்டம் முதல் அமைச்சரவை நிலையான பெறுகைக்குழுவிற்கு மாற்றப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக மருந்து இருப்பினை பெறுவதற்கு அண்ணளவாக 02 வருட காலம் எடுத்திருந்தது. பெறுகை நடவடிக்கைகளுக்காக 20 மாத காலம் எடுத்து தெரிவு செய்யப்பட்டிருந்த கேள்விதாரர் புதிய வழங்குனராக இருந்தமை காரணமாக தேவையான இருப்பில் 50 சதவீதத்திற்காக மாத்திரம் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. மிகுதி 50 சதவீதம் கேள்வி கையளிப்பதற்காக மேலும் 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக 2021 பெப்ரவரி 23 இல் விநியோகிக்கப்பட்டிருந்த கட்டளையில் மதிப்பீட்டு மட்டத்தில் காணப்படுகின்றமை காரணமாக இந்த மருந்துகள் 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் மருத்துவ வழங்கல் பிரிவு, வைத்தியசாலைகளுக்கு ஒரு மாதத்திற்கு குறைவான இருப்பு அளவு மாத்திரம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த தாமதத்தின் காரணமாக ரூபா 481 இற்கு கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்த இந்த மருந்து 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் வைத்தியசாலைகளினால் ஒரு அலகு ரூபா 1,956 இற்கும் ரூபா 4,697 இற்கும் இடையிலான பல்வேறு விலைகளின் கீழ் ரூபா 49.52 மில்லியன் செலவில் உள்நாட்டு சந்தையிலிருந்து அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

8.1.10 இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பற்றாக்குறை மருந்து பட்டியல்களில் காண்பிக்கப்படுகின்ற 23 மருந்து விடயங்கள் இருப்பு பெறுவனவு கால அட்டவணையில் தொடர்ச்சியாக திருத்துவதற்கு உட்பட்டமை, மருத்துவ வழங்கல் பிரிவு மற்றும் பெறுகைகள் குழுவினால் கட்டளைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டமை, கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் கொவிட் 19 நோய் பரவலின் காரணமாக தேவை வீழ்ச்சியடைந்தமை போன்றவற்றின் காரணமாக அந்த மருந்துகளின் பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. (விபரம் இணைப்பு 08 இல் காண்பிக்கப்படுகின்றது)

8.1.11 இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படாத Nitrofurantoin tab.50mg மருந்து விடயத்திற்காக மருத்துவ வழங்கல் பிரிவினால் 2021/2022 ஆம் ஆண்டுகளுக்காக அந்த கூட்டுத்தாபனங்களுக்கு கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவினால் அந்த மருந்து விடயங்கள் அந்தக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்ளாமல் கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கட்டளை பின்னர் இரத்துச் செய்யப்படும் வரை கட்டளைக்காக காலமொன்றை எடுத்திருந்தது.

## 9. 2022 மே 13 ஆந் திகதி வரையில் இனங்காணப்பட்டிருந்த பற்றாக்குறை மருந்துகளை வழங்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

---

9.1 மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சு, மருத்துவ வழங்கல் பிரிவு, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் என்பவற்றினால் இனங்காணப்பட்ட மருந்து வழங்குனர்களுக்கு செலுத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் அந்நிய செலவாணி பற்றாக்குறை காரணமாக வழங்குதலுக்கு செலுத்த முடியாதுள்ள மருந்து விடயங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக கீழே விபரங்கள் குறிப்பிடப்படுகின்ற உதவி திட்டத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(i) இந்திய கடன் உதவி திட்டம் (ICL – Indian Credit Line)

(ii) உலக வங்கி கடன் உதவி திட்டம் (WB)

(iii) உலக சுகாதார அமைப்பின் உதவி (WHO)

(iv) ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி (ADB)

(v) ஏனைய நன்கொடையாளர்களின் உதவி அமைச்சுக்கு கிடைப்பனவு

9.1.1 ஒவ்வொரு உதவி மூலத்தின் கீழ் வழங்குவதற்கு இணங்கப்பட்டுள்ள நிதிஉதவி தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிஉதவி கிடைக்கின்ற மூலம்** | **வழங்குவதற்கு இணங்கப்பட்டுள்ள நிதி** |
|---|---|
| | **ஐ.அ.டொலர். மில்லியன்** |
| 2022 மே 13 ஆந் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட கடன் உதவி | |
| இந்திய கடன் உதவி திட்டம் (ICL – Indian Credit Line) | 200 |
| உலக வங்கி கடன் உதவி திட்டம் (WB) | 23 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி (ADB) | 21 |
| | 244 |
| 2022 மே 13 ஆந் திகதி வரையில் அங்கீகரிக்கப்படாத கடன் உதவி | |
| உலக வங்கி கடன் உதவி திட்டம் (WB) | 50 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி (ADB) | 145 |
| | 195 |
| மொத்தம் | 439 |

9.1.2 இந்திய கடன் வசதியின் கீழ் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட (country of origin - India) மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவில் மற்றும் ஒசுசல கட்டளைகளுக்காக அமெரிக்க டொலர் 126 மில்லியனும், அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்காக அமெரிக்க டொலர் 04 மில்லியனும், உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்காக அமெரிக்க டொலர் 25 மில்லியனும், தனியார் வழங்குனருக்காக அமெரிக்க டொலர் 45 மில்லியனுமாக அமெரிக்க டொலர் 200 மில்லியன் கடன் உதவி வழங்கப்பட்டிருந்த போது 2022 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் அமைச்சின் மருந்து உப குழுவினால் அமெரிக்க டொலர் 55.5 மில்லியன் பெறுமதியான மருத்துவ வழங்கல்களுக்காக மாத்திரம் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அது அந்த நிதியுதவியில் 28 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் மருத்துவ வழங்கல் பிரிவுக்காக கட்டளை விநியோகிக்கின்ற அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் ஒசுசல என்பவற்றிற்காக ஒதுக்கப்பட்ட கடன் உதவி தொகையில் 91 சதவீதம் அதாவது அமெரிக்க டொலர் 114.6 மில்லியன் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. (விபரம் இணைப்பு 09 இல் காண்பிக்கப்படுகின்றது) 2022 மே 18 ஆந் திகதி வரையில் ஐ.அ.டொலர் 200 மில்லியன் டொலரில் 92.9 மில்லியன் டொலர் தொகையான பட்டியல் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

9.1.3 இந்த நிதியுதவி முறைமையின் கீழ் அமைச்சினால் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுகூட பொருட்கள் தொடர்பான பட்டியல் இணைப்பின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

**நிதியுதவி /நிதி வழங்குகின்ற நிறுவனம்**

---------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | இந்திய கடன் உதவி முறைமை (ICL) | (இணைப்பு 10) |
| (ii) | உலக வங்கி கடன் உதவித் திட்டம் (WB) | (இணைப்பு 11) |
| (iii) | ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிஉதவி (ADB) | (இணைப்பு 12) |

9.1.4 இதற்கு மேலதிகமாக சில வைத்தியசாலை பணிப்பாளர்களினால் தமது வைத்தியசாலைகளின் பற்றாக்குறை மருந்துகள் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகளை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடப்பட்டிருந்தது. (விபரம் இணைப்பு 13 இல் காண்பிக்கப்படுகின்றது)

9.1.5 வெளிநாட்டவர்களைப் போன்று வெளிநாடுகளில் ஊழியர்களினால் சுகாதார அமைச்சிற்கு மருத்துவ வழங்கல்களுக்காக அனுப்பப்படுகின்ற பணத்திற்காக சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் தனிப்பட்ட கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10. பரிந்துரை

----------------

கீழே குறிப்பிடப்படுகின்ற பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் இந்த அறிக்கையில் 8 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை மாற்றியமைக்க முடியுமாக இருந்ததுடன் சரியான நியமத்தையுடைய மருத்துவ வழங்கல்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கும் உரிய சந்தர்ப்பங்களின் போது சரியான அளவில் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் முடியுமாக இருந்தது.

10.1 அமைச்சு பெறுகைக் குழு மற்றும் அமைச்சரவை பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினால் அனுப்பப்படுகின்ற கோவைகளுக்கு உரிய நடவடிக்கைகள் சரியான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் செயற்திறனாக அமுல்படுத்துவதன் மூலம் பெறுகை நடைமுறையில் தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தமையும் அது தொடர்பான பொறுப்புக்களை உரிய உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட வேண்டியமையும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.2 செயற்திறனான இருப்புக் கட்டுப்பாட்டிற்காக சகல மருத்துவ வழங்கல்களுக்காகவும் 03 மாதம் பாதுகாப்பு இருப்பொன்று பேணப்படல் வேண்டும். எனினும், தற்போதைய மருத்துவ வழங்கல் பெறுகைகளுக்காக எடுக்கின்ற காலம் (Procument Lead Time) 11 மாத அளவாக இருந்தமையால் 06 மாத பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் அதற்காக போதியளவான களஞ்சியவசதிகள் காணப்படாமையால் அதிக கிரயமொன்றை செய்வதற்கு ஏற்படுகின்றதுடன் பெறுகைகளுக்காக எடுக்கப்படுகின்ற காலத்தை குறைப்பதன் மூலம் பாதுகாப்பு இருப்பின் அளவினையும் குறைவடைந்திருந்தமையும் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தமையும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.3 மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதற்கு எடுக்கப்படுகின்ற காலம் (Lead Time) குறைத்துக் கொள்வதற்காக மீண்டும் கட்டளையிடும் இருப்பு மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டளைகள் முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.4 தகுதியான மருத்துவ வழங்கல் விடயங்களுக்கான இருப்பு மட்டத்தை பேணிச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.5 கணனி முறைமையை சரியான பிரகாரம் நாளதுவரையாக்குவதற்கும், உரிய பிரகாரம் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.6 மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்திற்கு பிரதானமாக தொடர்புபடுகின்ற சுகாதார அமைச்சு, இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பு மற்றும் இணைப்பொன்றை பேணிச் செல்ல வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.7 மருத்துவ வழங்கல் பிரிவினால் அடுத்துவரும் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ வழங்கல் கட்டளைகளின் செயல்முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த பொறுப்புக்கள் சரியாக உத்தியோகத்தர்களுக்கு கையளிக்க வேண்டுமெனவும் பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.8 வைத்தியசாலைகளில் பற்றாக்குறை மருந்துகள் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு முடியுமான வகையில் இலகுவான திட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்த வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.9 மருந்து பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சின் ஊடாக அமுல்படுத்தப்படுகின்ற நிதியுதவி திட்டங்களின் தடைகளைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.10 இந்தியக் கடன் உத்தேச திட்டத்தின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள பெறுகைகளில் உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்காக குறுங்காலத்தில் உரிய வழங்குனர்களை தெரிவுசெய்து வர்த்தக அமைச்சிற்கு அனுப்புமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.11 அந்த கடன் உத்தேச முறைமையில் இது நிபந்தனைகளை பூர்த்தி செய்யக் கூடிய முறையில் இந்திய உற்பத்திகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.12 இந்திய கடன் உத்தேச திட்டத்தில் உள்ளடக்க முடியாதிருந்த அத்தியவசிய மருந்து கட்டளைகள் உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம், ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி அல்லது ஏனைய நன்கொடையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.13 சகல நிதியுதவிகளையும் உச்ச அளவில் முகாமைத்துவம் செய்ய வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.14 எதிர்வரும் 03 மாதங்களுக்காக தேவையான சகல கட்டளைகளும் மே மாதம் முடிவடைவதற்கு முன்னர் உரிய நிறுவனங்களுக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.15 கணனி முறைமை ஊடாக இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், எழுத்துமூல கட்டளை கிடைக்கும் வரையான தாமதத்தை தவிர்த்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

10.16 இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கும், உற்பத்தி மருந்துகளின் வகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் ஆன இயலுமையைக் கண்டறிவதற்கும் மற்றும் அதற்காக முன்னுரிமை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்படுகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
2022 **மே** ஆந் திகத